அ.வ.எண்: 173/2015 நாள்:08.06.2023

பி.வா.சா.1. சிங்காரவேலு

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு மூத்த சகோதரி ஆவார். இந்த வழக்கின் 1வது பிரதிவாதி என்ன உறவு முறை என்றால் என் தம்பி ஆவார். இந்த வழக்கின் 3வது மற்றும் 4வது பிரதிவாதி எங்கள் குடும்பத்தை சார்ந்தவர்களா என்றால் இல்லை. நான் ரயில்வே காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளர் என்றால் சரிதான்.

2) வாதி தான் எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி நபருக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 1963 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. மேற்படி நபர் திருமணத்திற்கு பின்பு திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கணவர் வீட்டில் வசிக்கிறார் என்றால் ஆமாம். எனது சகோதாயின் கணவருக்கு மருவத்தூர் கிராமத்தில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுடன் வசதி வாய்ப்பாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை 1970 ஆம் ஆண்டு வாங்கினார்கள் என்றால் சரிதான்.

3) தாவா சொத்து வாங்கிய காலத்தில் எனது சகோதரி எங்கு வசித்து வந்தார் என்றால் அவர் கணவருடன் மருவத்தூரில் வசித்து வந்தார். தாவா சொத்து இருக்கும் கிராமத்திற்கும் எனது சகோதரி வசிக்கும் கிராமத்திற்கும் இடையில் 60 கி.மீ தூரம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரியின் ஊரான மருவத்தூருக்கு அடிக்கடி சென்று வரும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை எனது தகப்பனார் அவருக்கு வந்த வருமானத்தை வைத்து மூத்த மகளான வாதி பெயரில் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் இல்லை.

4) எனது தகப்பனார் காவல்துறையில் பணிபுரிந்ததால் தான் எனது தகப்பனார் பெயரில் சொத்து வாங்காமல் வாதியின் பெயரில் சொத்து வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ஒட்டு மொத்த குடும்பத்திற்காக முதலீடு என்ற முறையில் தான் வாங்கப்பட்டது தவிர தனிப்பட்ட முறையில் வாங்கியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த வருடம் காலம் ஆனார் என்றால் 1987

ஆம் ஆண்டு. எனது தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் நாங்கள் அனைவரும் கூட்டு பங்குஉரிமையர் என்ற முறையில் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் இல்லை. எனது சகோதரியின் பெயரில் சொத்து வாங்கியது போலவே சகோதரர் மற்றும் மற்ற சகோதரிகள் பெயரில் சொத்து வாங்கப்பட்டதா என்றால் இல்லை.

5) எனது தகப்பனார் இறந்த பிறகு 28.04.2004 ஆம் ஆண்டு பதிவான பாகபத்திரம் மூலம் நாங்கள் அனைவரும் பாகம் பிரித்து கொண்டோம் என்று சொன்னால் 1 வது பிரதிவாதி நாடிமுத்து நான் பணிபுரிந்த ரயில்வே காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு ரயில்வே காவல் நிலையத்தில் ஆய்வாளரால் பாகபிரிவினை ஏற்படுத்தப்பட்டு அந்த பாகபிரிவினை தான் பத்திரமாக பதிவு செய்யப்பட்டது. எனது விருப்பம் இல்லாமல் மேற்படி பாகபிரிவினை நடைபெற்றது குறித்து ரத்து செய்ய இன்று வரை நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 35 ஏர்ஸ் ஆகும்.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.